


24. 11. 2025

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் பாதுகாப்பு படை ராணுவ வீரர்கள் துணிச்சலுடன் அளப்பரிய சேவையாற்றுவதாக ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திரா திவேதி தெரிவித்துள்ளார்.
- உச்சநீதிமன்றத்தின் 53ஆவது தலைமை நீதிபதியாக நீதிபதி சூர்யகாந்த் இன்று பதவி ஏற்றார்.
- தமிழக விவசாயிகளின் நலனை காக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழ்நாட்டில் பரவலாக பெய்து வரும் மழையால் நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.
- தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான 2ஆவது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்சில் இந்தியா 7 விக்கெட்டை இழந்து தடுமாறி வருகிறது.

இனி விரிவான செய்திகள்

***********

உபேந்திரா திவேதி

கூட்டு முயற்சி மற்றும் ஒற்றுமை இந்திய ஆயுதபடைகளின் வலிமையாக திகழ்வதாக ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திரா திவேதி கூறியிருக்கிறார்.

இந்திய கடற்படையின் நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பலான மாஹேவை மும்பையில் இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து பேசிய அவர், கடலின் ஆழம் முதல், மலை உச்சிவரை எல்லையை பாதுகாக்க, வீரர்கள் வலிமையுடன் செயலாற்றுவதாக தெரிவித்தார்.

இந்திய கடற்படை, அண்டை நாடுகள் மட்டுமன்றி உலகளாவிய அளவில் முக்கிய பங்காற்றுவதாக கூறிய அவர், ஆயுதபடைகளுக்கிடையேயான கூட்டுறவிற்கு சிறந்த உதாரணமாக ஆபரேசன் சிந்தூர், திகழ்வதாக குறிப்பிட்டார்.

***********

உச்சநீதிமன்றம்

உச்சநீதிமன்றத்தின் 53ஆவது தலைமை நீதிபதியாக சூர்யகாந்த் இன்று பதவி ஏற்றார்.

குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

***********

பிரதமர் வாழ்த்து

உலக குத்துசண்டை போட்டியில் 9 தங்கம் உள்ளிட்ட 20 பதக்கங்களை வென்றுள்ள இந்திய குத்துசண்டை வீரர்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் வீரர்கள் அசாதாரணமான செயல்திறனை வெளிப்படுத்தி சாதனை படைத்துள்ளதாகவும், அவர்களின் எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துவதாகவும் தமது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பார்வையற்றோருக்கான முதன்முறையாக மகளிர் 20-20 உலக கோப்பையை வென்று வரலாற்று சாதனைபடைத்துள்ள இந்திய பார்வையற்றோர் மகளிர் கிரிக்கெட் அணிக்கு தமது வாழ்த்துக்களை பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி எதிர்கால தலைமுறையினருக்கு உக்கமளிக்கும் என்றும் கூறியுள்ளார்.

***********

பிரதமர் அயோத்தி

பிரதமர் திரு.நரேந்திரமோடி உத்திபிரதேசம் மாநிலம் அயோத்தி ஶ்ரீராமர் கோவிலின் கட்டுமான பணிகள் நிறைவடைந்ததை குறிக்கும் கொடியேற்றும் வைபவத்தில் நாளை பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

விழாவை ஒட்டி 100 டன் மலர்களால் பாலராமர்கோவில் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

***********

திரைப்பட விழா

கோவா பனாஜியில் நடைபெறும் 56 ஆவது சர்வதேச இந்திய திரைப்பட விழாவின் 5ஆம் நாளான இன்று செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஹேக்கத்தான் நடைபெறுகிறது.

பிரபல திரைப்பட தொகுப்பாளர் ராஜூவ் ஹிரானி எடிட்டிங்கின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளிக்கிறார்.

இதனிடையே ஐக்கிய நாடுகள், குழந்தைகள் நிதியத்துடன் இணைந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் குழந்தை பருவத்தின் போராட்டங்களை எடுத்துரைக்கும் திரைப்படங்கள் திரையிடப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பேசிய யுனிசெஃப் இந்திய பிரதிநிதி, சிந்தியா மெக்காஃப்ரே உலகெங்கிலும் உள்ள குழந்தைகளின் பல்வேறு வாழ்க்கை கலாச்சார முறைகளை இத்திரைப்படங்களின் வாயிலாக எல்லை தாண்டி உணர முடிந்ததாக கூறினார்.

குழந்தைகளின் பிரச்சனைகள் சவால்கள் வாய்ப்புகள் குறித்து தெரிவிக்க இந்த திரைப்பட விழாவில் குழந்தைகள் தொடர்பான 5 திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

***********

மகளிர் ஆணையம்

நாட்டில் துன்புறுத்தலுக்கு ஆளாகும் மகளிருக்கு விரைவான நிவாரணத்தை உறுதி செய்யும் வகையில் 24 மணிநேரமும் செயல்படும் புதிய உதவி எண்ணை தேசிய மகளிர் ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது.

1 4 4 9 0 என்ற இந்த கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் நாட்டின் எந்த பகுதியிலிருந்தும் துன்புறுத்தல், வன்முறைக்கு ஆளாகும் மகளிர் தாமதமின்றி உதவிகளை பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

சட்டங்கள்

மத்திய அரசின் 4 புதிய தொழிலாளர் நல சட்டங்கள் பணி நியமனம் மற்றும் மகளிருக்கான உடல் நலத்தை உறுதி செய்வதாக நாமக்கல் மற்றும் திருப்பூரை சேர்ந்த தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாய்ஸ்

***********

முதலமைச்சர்

தமிழக விவசாயிகளின் நலனை காக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியின் குற்றச்சாட்டிற்கு பதில் அளித்துள்ள முதலமைச்சர், கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்ட போதிலும்

அதிக மழை காரணமாக நெல் ஈரப்பதம் கண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நெல் கொள்முதல் ஈரபத அளவை 22 சதவிகிதமாக உயர்த்தி வழங்க மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் கூறியுள்ளார்.

இதனிடையே முதலமைச்சர் கோவை ஈரோடு மாவட்டங்களின் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம்குறித்து நாளைமுதல் இரண்டு நாட்கள் கள ஆய்வு மேற்கொள்கிறார்.

கோவையில் 208 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி பூங்காவினை நாளை திறந்துவைக்கும் முதலமைச்சர் தொழில் முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடுகிறார்.

***********

உதயநிதி ஸ்டாலின்

தமிழ்நாட்டில் மகளிர் உரிமை தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் விடுபட்ட மகளிருக்கு வரும் 15ஆம் தேதிமுதல் உரிமை தொகை வழங்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை திருவேற்காடு சுந்தரசோழபுரத்தில் 333 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்ட பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், இத்திட்டத்தின் கீழ் இதுவரை ஒருகோடியே 15 லட்சம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்றுவருவதாக கூறினார்.

மகளிர் மட்டுமன்றி பள்ளி செல்லும் மாணாக்கர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் தேவையான நல திட்ட உதவிகளை அரசு வழங்கி வருவதாக கூறினார்.

வாய்ஸ்

இந்நிகழ்ச்சியில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு லட்சத்து 12 ஆயிரம் பேருக்கு அரசின் நல திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

முன்னதாக அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 11 கோடியே 81 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகள் கொண்ட தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தை அவர் திறந்துவைத்தார்.

***********

அன்பில் மகேஷ்

தமிழ்நாடு மாநில புதிய பாடதிட்டத்தை வடிவமைப்பது தொடர்பாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் உயர்மட்ட வல்லுநர் குழு கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது.

இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன்,

நிதித்துறை முதன்மை செயலர் திரு.உதயசந்திரன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

***********

அர்ச்சனா பட்நாயக்

இந்திய தலைமை தேர்தல் அதிகாரிகள், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக்குடன் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்டனர்.

தேர்தல் ஆணையத்தின் ஊடக பிரிவை சேர்ந்த துணை இயக்குனர்கள் பவன் மற்றும் தேவன்ஸ் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

இன்றுமுதல் வரும் 26ஆம் தேதிவரை சென்னை செங்கல்பட்டு கோவை திருப்பூர் மாவட்டங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தொடர்பாக தேர்தல் ஆணையம் கள ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

***********

வாக்காளர் பட்டியல்

அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் வட்டாச்சியர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவத்தை பூர்த்தி செய்ய உதவிடும் வகையில் இன்றும் நாளையும் சிறப்பு உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி அருணா இன்று நேரில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் துல்லியமாகவும், குறிப்பிட்ட வழிகாட்டு

நெறிமுறைகளின்படி நடைபெறுவதும் குறித்தும் அவர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

***********

மழை மாவட்டங்கள்

தமிழகத்தில் பெய்து வரும் மழை காரணமாக பல்வேறு நீர்நிலைகள் வேகமாக நிரம்பிவருகின்றன.

தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை அணையிலிருந்து உபரிநீர் திறக்கப்படுவதால் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோதையாறு, பரலியாறு, குளித்துறை தாமிரபரணி ஆற்றங்கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்துவரும் கன மழை காரணமாக விருதுநகர் ஸ்ரீவில்லிபுத்தூர் மீன்வெட்டி பாறை அருவியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது.

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி மற்றும் சித்தேரி மலை பகுதியில் கலசபாடி காட்டாற்றில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேகமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருச்சி புளியஞ்சோலை பகுதியில் ஆற்றில் இறங்கவோ, குளிக்கவோ, செல்ஃபி எடுக்கவோ கூடாது என்று வனத்துறை உத்தரவிட்டுள்ளது.

காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த நாட்டுப்படகு மற்றும் விசைபடகு மீனவர்கள் மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல மீன்வளத்துறை தடை விதித்துள்ளது.

இதன்காரணமாக அதிராம்பட்டினம், மல்லிபட்டினம், சேதுபாவாசத்திரம், கீழதோட்டம், ஏரிபுரக்கரை உள்ளிட்ட மீனவ கிராமங்களிலிருந்து மீனவர்கள் இன்று கடலுக்குள் செல்ல வில்லை.

ஆழ்கடல் மீனவர்கள் உடனடியாக கரை திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

***********

வானிலை

வங்க கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக

வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அதற்கு அடுத்த 48 மணிநேரத்தில் தென் கிழக்கு வங்க கடலில் புயலாக வலுப்பெறும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

இதனிடையே திருநெல்வேலி தென்காசி மாவட்டங்களில் இன்று கன முதல் மிக கனமழையும்,

கன்னியாகுமரி தூத்துக்குடி ராமநாதபுரம் புதுக்கோட்டை தஞ்சாவூர் திருவாரூர் சிவகங்கை உள்ளிட்ட 10 மாவட்டங்களில் இன்று கன மழையும் பெய்ய வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

***********

திருவண்ணாமலை

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் கார்த்திகை தீப திருவிழா இன்றுகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*10 நாட்கள் நடைபெறும் இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பரணி தீபம் வரும் 3ஆம் தேதி காலையும்,*

*அன்றுமாலை அண்ணாமலையார் மலை உச்சியில் மகா தீபமும் ஏற்றப்படுகிறது.*

***********

கிரிக்கெட்

குஹாட்டியில் தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3-ஆம் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் உணவு இடைவேளையின்போது 7 விக்கெட் இழப்பிற்கு 174 ரன் எடுத்திருந்தது.

தென்னாப்பிரிக்கா முதல் இன்னிஸ் ஸ்கோர் 489.

***********

கபடி

மகளிர் உலக கோப்பை கபடி இறுதி போட்டியில் இந்தியா இன்றுமாலை சீன தைபேயை எதிர்கொள்கிறது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

***********